**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**MCOP.No** 128/2013 **C/W MCOP.No** 127/2013

**Date**: 07.01.2023.

பெயர் - முனியப்பன் - (**PW**2)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்து 2012 ம் வருடம் சின்னப்பம்பட்டி மேட்டுக்காட்டில் நடந்தது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா? என்றால் கொடுத்தேன். நான் எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் குறிஞ்சி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது புகார் கொடுத்தேன். விபத்து நடந்த தேதி ஞாபகம் இல்லை. விபத்து நடந்து 3 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் விபத்து தொடர்பாக புகார் கொடுக்கவில்லை எனவும், ஜோதிகுமார் என்பவர் தான் புகார் கொடுத்தார் என்றால், 4 பேர் சென்றோம் சுப்ரமணி என்பவர் தான் புகார் கொடுத்தார். யார் யார் விபத்து சமயத்தில் சென்றோம் என்றால், நான் மற்றொரு முனியப்பன் சுப்ரமணி, சண்முகம் டிரைவர், மற்றொருவர் பெயர் தெரியவில்லை. என்னுடன் வந்த முனியப்பனின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு வயது 37 என்றால் எனக்கு தெரியாது. நான் சென்ட்ரிங் வேலை செய்துவருகிறேன். விபத்திற்கு முன்பு நான் சென்ட்ரிங் வேலை செய்து வந்தேன். தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. மாதம் ரூ.10,000 சம்பளம் வாங்கினேன் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நான் கூலி வேலைக்கு தான் சென்றேன் எனவும், சென்ட்ரிங் வேலை செய்து மாதம் ரூ.10,000 சம்பளம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏறபட்டதாக கூறும் காயங்கள் தற்போது குணமாகிவிட்டன என்றால், தற்போதும் கால் வலி உள்ளது. நான் தாக்கல் செய்த மனுவில் இந்த விபத்திற்கு முழு காரணமும் ஓட்டுநர் சண்முகம் தான் காரணம் என்று முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். டிரைவர் சண்முகத்தை நான் எதிர்தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். டிரைவர் சண்முகத்திற்கு விபத்து சமயத்தில் பொதுபணிவில்லை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டிரைவர் சண்முகத்திற்கு பொதுபணிவில்லை இல்லாததால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.17 ல் 2 வது பக்கத்தில் உள்ள பில் எண். 14331 வி. முனியப்பன் என்பவரது எனவும், அவருக்கு வயது 49 எனவும்,

குறிப்பிட்டுள்ளபடியால் வடிவேல் என்பவரின் மகன் என்பதால் அந்த தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல. 6 வது பக்கத்தில் பில் எண். 33348 ல் 2 வது பக்கத்தில் உள்ள பில் எண். 14331 வி. முனியப்பன் என்பவரது எனவும், அவருக்கு வயது 49 எனவும், குறிப்பிட்டுள்ளபடியால் வடிவேல் என்பவரின் மகன் என்பதால் அந்த தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல. பக்கம் 3 ல் பில் எண் 31577 ல் உள்ள பில் மாரியப்பன் என்பவர் பெயரில் உள்ளதால் அந்த தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இது தவிர வி. முனியப்பன் வயது 49 என்று குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ம.சா.17 ல் உள்ள அனைத்தும் என்னுடன் பயணம் செய்த மற்றொரு வடிவேல் ஆசாரி மகன் முனியப்பன் என்பவருடையது எனக்கு ம.சா.17 ல் உள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. டிரைவர் சண்முகத்திற்கு பொதுபணிவில்லை இல்லாததால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/- முனியப்பன்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.